## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வள மற்றும் விவசாய வணிக (தனியார்) கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான

வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

**1.5.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 7.4(அ) பந்தியின் பிரகாரம் இருப்பு மாற்றங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் முகப்பில் தனியாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 174,891 தொகையான இருப்பு மாற்றங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் தனியாக காண்பிக்கப்பட்டிருக்க வில்லை | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | காசுப்பாய்ச்சல் கூற்றை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபார தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 7.4(ஈ) பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு வெளிப்பாய்ச்சலாக கருத வேண்டிய ரூபா 308,700 தொகையான பணிக்கொடை கொடுப்பனவுகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | காசுப்பாய்ச்சல் கூற்றை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 17.8 ஆம் பந்தியின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களுடன் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் அவை தனித்தனி சொத்துக்களாக இருந்ததுடன் கணக்கீட்டிலும் தனித்தனியாக மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் கம்பனியின் ரூபா 62,631,504 கிரயமான காணி மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 17.19 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக கம்பனிக்கு சொந்தமான கிரயம் ரூபா 7,800,562 ஆன 23 வாகனங்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை திருத்துதவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விற்பனைக் கிரயத்தை கணிப்பீடு செய்யும் போது ரூபா 9,186,655 தொகையான ஆண்டின் இறுதி மூலதன உயிரியல் இருப்புக்களும் உள்ளடக்கப்பட்டமையின் காரணமாக மொத்த இலாபம் அப்பெறுமானத்தினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு தற்போது பயன்படுத்தப்படுகின்ற மின்பிறப்பாக்கியின் கிரயம் அல்லது மீள்மதிப்பீட்டு பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த மின்பிறப்பாக்கியை மீள்மதிப்பிட்டு சொத்துக்கள் பதிவேட்டில் எதிர்வரும் ஆண்டின் போது உள்ளடக்கப்படும் என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (இ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய பெறுமதிகளின் மாற்றங்கள் காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 4,621,555 தொகை காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் மொத்த வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய பெறுமதிகளின் மாற்றங்கள் ரூபா 6,611,261 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (ஈ) | முறையான எழுத்துமூல ஆவணப் பரிமாற்றமின்றி கம்பனிக்கு சொந்தமாக காணப்பட்ட நீராவிய, துங்கம, கந்தளாய், சித்தப்புர மற்றும் முத்துவெல்ல என்ற விவசாய பண்ணைகளில் 2005-2010 இடையிலான காலப்பகுதியில் மகாவலி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட போதிலும் அந்த பண்ணைகளுக்கு சொந்தமான கிரயம் ரூபா 25,073,083 ஆன 164 கட்டிடங்கள் மற்றும் பொருத்திகள், 26 வாகனங்கள், 45 அலுவலக உபகரணங்கள், 66 இயந்திர உபகரணங்கள் மற்றும் மின்பிறப்பாக்கிகள் மற்றும் 260 தளபாடங்களும் பொருத்திகளும் என்பன தொடர்ந்தும் கம்பனியின் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அந்த சொத்துக்களுக்குரிய வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 1,873,629 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் அவற்றின் | கம்பனியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பண்ணைக்கு சொந்தமான சொத்துக்கள் கம்பனிக்கு சொந்தமற்று இருந்ததுடன் கம்பனியினால் பயன்படுத்தப்படா மையினால் அந்த சொத்துக்களில் இருந்து கம்பனியின் செயற்பாடுகளுக்கு பங்களிப்பு செய்யாமையினால் அந்த | சொத்துக்களை தீர்த்து வைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பௌதீக இருப்பு தொடர்பான மெய்மையாய்வு மகாவலி அதிகார சபை அல்லது கம்பனியினால் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக அந்த சொத்துக்களின் பௌதீகரீதியான இருப்பு கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்படவில்லை. இந்த சொத்துக்களை மீண்டும் மகாவலி அதிகார சபைக்கு கையளிப்பதற்கு உரிய தகவல்கள் அறிக்கையிடப் பட்டுள்ளதுடன் இதுவரையில் ஆலோசனைகள் கிடைத்திருக்கவில்லை. மகாவலி அதிகார சபையிலிருந்து பெறப்படுகின்ற ஆலோசனையின் அடிப்படையில் அந்த சொத்துக்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் அறியத்தருகின்றோம். |

### 1.5.4 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | தொகை | தொங்கல் கணக்காக காணப்பட்ட காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வு அவதானிப்பு |
|---|---|---|---|---|
| கடன்பட்டோர் மீதியின் கீழ் ரூபா 3,512,504 தொங்கல் கணக்கு மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2,047,972 மீதி 2017 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | 3,512,504 | 03 வருடங்கள் | இந்த மீதிக்குரியதகவல்கள் பகுப்பாய்வு செய்தல் கடினமானதாக இருந்தது. எதிர்வரும் வருடத்தின் போது அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | தொங்கல் கணக்கை தீர்த்து வைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றிதழ் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வு அவதானிப்பு |
|---|---|---|---|---|---|
| (அ) | பொது ஒதுக்கம் | | | | |
| (i) | மகாவலி பொருளாதார முகவராண்மை | 403,918,731 | பெறுமதியை உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகள் | இந்த மீதி கால்நடை வள அபிவிருத்திக்கு பிரிவாக காணப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடாகும். | மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு நேரடியாக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | கொத்மலை பால் அபிவிருத்தி நிதியம் | 2,900,000 | | | |
| (iii) | ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழுவின் மூலதன மானியம் | 3,583,706 | மூலதன மானியமாக கணக்கீடு செய்வதற்குரிய ஆவணங்கள் | இந்த முதலீடு கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு கம்பனியாக உருவாக்கப்பட்டதன் பின்னர் கம்பனியின் மூலதனமாக மாற்றப்பட வேண்டியிருந்த போதிலும் மகாவலி அதிகார சபை கம்பனியின் பங்கு விநியோகித்தல் மேற்கொள்ளப் படாதிருந்த இந்த மீதி தொடர்ச்சியாக கால்நடை வள அபிவிருத்தி பிரிவில் கணக்குகளில் காணப்பட்ட பெயர்களிலேயே இருந்தது. அதனால் அந்த மீதிக்குரிய ஆவணங்கள் கம்பனியிடம் காணப்படவில்லை. | திட்டமிட வேண்டியிருந்த துடன் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) | வெளிநாட்டு நிதி உதவி | 5,729,782 | | | |
| (ஆ) | செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 285,185 | மீதி உறுதிப்படுத்தல் மற்றும் வரி சான்றிதழ் பத்திரம் | செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி இந்தக் கோவைகள் செயற்பாடற்ற | - மேற்படி - |
| (இ) | செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி | 2,991,095 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நிலையில் காணப்படுகின்றது. இந்த மீதியை பதிவழிக்க வேண்டியுள்ளது. | |
| (ஈ) | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய மீதி | 165,600 | மீதி உறுதிப்படுத்தல் | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய மீதி 2003 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற மீதியாகும். இதனைப் பதிவழிப்பதற்கு எதிர்வரும் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (உ) | பெற வேண்டிய முற்பண மீதி | 220,092 | மீதி உறுதிப்படுத்தல் | இது 2009 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலாக இருந்ததுடன் 2009 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படுகின்ற மீதியாகும். | - மேற்படி - |
| (ஊ) | தம்மின்ன உள்ளக பண்ணை மீதி | 818,177 | மீதி உறுதிப்படுத்தல் | இதனை எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 ஆம் ஆண்டின் போது நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த நீராவிய பண்ணைக்கு சொந்தமாக இருந்த ரூபா 5,820,430 தொகையான கால்நடை வள இருப்புக்களுக்காக பெறவேண்டிய பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது இந்த மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை மகாவலி அதிகார சபையின் ''எச்'' வலயத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மகாவலி கால்நடை வள மற்றும் விவசாய வணிக (தனியார்) கம்பனியின் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 5,373,970 ஆக இருந்த போதிலும் கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கடன்பட்டோர் மீதி ரூபா 5,820,430 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 446,460 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இந்த ரூபா 446,460 தொகையான மீதி ''எச்'' வலயத்திற்கு பண்ணையைக் கையளிக்கும் போது பண்ணைக்குச் சொந்தமாக காணப்பட்ட உற்பத்தி மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்திகளின் பெறுமதியாகும். | மீதியை தீர்த்து வைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட சம்பள திருத்தங்களின் பிரகாரம் ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 6,893,711 நிலுவை சம்பளமும், 2013 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் செலுத்த வேண்டிய ரூபா ரூபா 18,927,439 மற்றும் ரூபா 611,083 தொகையான பங்களிப்பு பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.<br>மீளாய்வாண்டின் போது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு மிகைக் கட்டணமாக ரூபா 11,830 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தின் போது பகுதியாக செலுத்துதல் ஆரம்பிக்கப்படும் என அறியத்தருகின்றோம். | செலுத்த வேண்டிய பணத்தை செலுத்துவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,793,005 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 4,663,530 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,129,475 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கம்பனியின் வியாபார நடவடிக்கைகள் மீள் ஒழுங்குபடுத்தப்படாமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் விஞ்ஞானபத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபா 10 ஆன 5,000,000 பங்குகளை உள்ளடக்கியிருந்ததுடன் ஆரம்ப பணிப்பாளர்களுக்கு 03 பங்குகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் ஏனைய பங்குகள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. விநியோகிக்கப்பட்ட 03 பங்குகள் ஏனைய தனியார் கம்பனியின் பணிப்பாளரகள் மூன்று பேருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மகாவலி அதிகார சபையின் உரித்திற்காக கம்பனியின் எந்தவொரு பங்கும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | விநியோகிக்கப்பட்ட பங்குகள் மூன்றும் மீண்டும் கம்பனிக்கு கையேற்பதற்கு எதிர்வரும் வருடத்தின் போது நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டதுடன் இலங்கை மகாவலி அதிகார சபையின் உரிமை தன்மைக்காக பங்குகளை விநியோகிப்பதற்கு மகாவலி அதிகார சபையுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | இலங்கை மகாவலி அதிகார சபைக்கு பங்குகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனி விஞ்ஞாபனத்தில் 12 ஆரம்ப நோக்கங்கள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கம்பனியின் பண்ணைகளில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் இருப்பு மற்றும் சிறு பகுதிகளாக கோழிகளை பராமரித்தல், விவசாயிகளுக்கு கோழி பராமரிப்பிற்காக தேவையான உணவு உற்பத்தி பசு, பன்றி, கோழிகள் போன்ற உயிரினங்களை இனப்பெருக்கம் செய்தல் விற்பனை | கம்பனி விஞ்ஞாபனத்தில் காண்பிக்கப்பட்ட விடயங்களை அமுல்படுத்துவதற்காக கம்பனிக்குச் சொந்தமாக மூலதன இயலுமை காணப்படாதிருந்தமையால் அதற்காக அரசாங்க தனியார் | கம்பனி விஞ்ஞாபனத்தில் காண்பிக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்று வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்தல் அபிவிருத்தி செய்தல், தயாரித்தல் மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகள் மற்றும் பழ வகை, தானியவகை சார்ந்த வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் எருமைமாடு, பசுமாடு, கோழி, பன்றி மற்றும் ஆடு பராமரிப்புகளில் சிறு அளவில் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | கூட்டு முயற்சியொன்றாக நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான பின்புலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை அமுல்படுத்தியதன் பின்னர் அந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | |
| (ஆ) | கம்பனியினால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான ரூபா 3,162,812 தொகையான 04 வாகனங்கள் மற்றும் கம்பனியின் பிரதான அலுவலகத்தில் அமைந்துள்ள மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான தெமட்டகொட பிரதேசத்தில் அமைந்துள்ள காணி கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் ரூபா 14,929,159 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் அந்த சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதனை எதிர்வரும் வருடத்தின் போது மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | சொத்துக்களை தீர்த்து வைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் கால்நடை வளப் பிரிவில் அமுல்படுத்தப்பட்டிருந்த செயற்பாடுகளின் கீழ் இலக்கிடப்பட்ட உள்ளபடியான உற்பத்தியுடன் ஒப்பீடு செய்யும் போது புறொயிலர் கோழி இறைச்சி உற்பத்தி 44 சதவீதமும், பன்றி இறைச்சி உற்பத்தி 03 சதவீதமும் ஆட்டு இறைச்சி 10 சதவீதமும் எருமை மாட்டு இறைச்சி 06 சதவீதமும் ஆன குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | கால்நடை உற்பத்தி பிரிவு முழுமையாக மீள் ஒழுங்கமைக்கப்பட வேண்டியுள்ளது. குளிரூட்டி வசதிகள் காணப்படாமையால் இறைச்சி உற்பத்தி மிகவும் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. இந்த பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு அரச மற்றும் தனியார் கூட்டு முயற்சியொன்றாக மீளமைக்கப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம். | இலக்கிடப்பட்ட உற்பத்திகளை அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கிராந்துருகோட்டை பண்ணையில் அமைந்துள்ள பால் தயாரிக்கும் ஆலை ஆரம்பிக்கப்பட்ட 1986 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்ட இயந்திர பொறிமுறைகளின் மூலம் பால்உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் தொழிற்சாலையின் கட்டிடத்தில் தரை டயில் உடைந்து சென்றமை, கூரை உடைந்திருந்தமை மற்றும் மழைநீர் தொழிற்சாலைக்குள் கசிந்தமை, வடிகால் முறைமைகள் உடைந்திருந்தமை மற்றும் உள்ளக சுத்திகரிப்பு முறைமைகள் நலிவான நிலையில் காணப்பட்டமை போன்ற விடயங்களின் காரணமாக உற்பத்திகளின் சுகாதார பாதுகாப்பு தொடர்பாக பிரச்சினைகள் எழுந்திருந்தது. | உற்பத்தி கூடத்தை புதிதாக நிர்மாணிப்பதற்காக அரச தனியார் கூட்டுமுயற்சி முதலீட்டு அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையை அமுல்படுத்தியதன் பின்னர் இந்த பணிகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம். | உற்பத்தியின் போது சுகாதார பாதுகாப்பு பிரச்சினைகள் ஏற்படுவதற்கான சர்ச்சைக்குரிய காரணங்களை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2020/21 பெரும்போக சோள பயிர்ச்செய்கைக்காக கம்பனியின் காணிகள் போக குத்தகை முறையின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கும் போது விவசாயிகளை தெரிவு செய்தல் மற்றும் குத்தகை பணத்தை தீர்மானித்தல் குழுவின் மூலம் தீர்மானிக்கப்படுவதுடன் இதன் மூலம் பெறப்படுகின்ற குத்தகைப் பண வருமானம் இறைச்சி களஞ்சியப்படுத்துவதற்காக குளிரூட்டி கொள்கலனொன்றை கொள்வனவு செய்வதற்கும், புறொயிலர் கூட்டினை பழுதுபார்ப்பதற்கும் ஈடுபடுத்துவதற்காக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் விவசாயிகளை தெரிவு செய்தல் மற்றும் குத்தகைப் பணத்தை தீர்மானித்தல் மேற்கூறப்பட்ட குழுவின் மூலம் மேற்கொள்ளப்படாதிருந்த துடன் உழைக்கப்பட்ட பணம் கணக்காய்வு திகதி வரையிலும் கம்பனியின் நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இந்தக் குத்தகைப் பணம் இலங்கை மகாவலி அதிகார சபையினால் ஒரு ஹெக்டயருக்காக ரூபா 1,000 அறவிடப்பட்டதுடன் பின்னர் அறவிடாமல் வழங்கப்பட்டிருந்தது. எனினும் எமது கம்பனிக்காக வழங்கக்கூடிய ஆகக்கூடிய விலையில் இந்தக் காணியை வழங்குவதற்கு கம்பனியின் பணிப்பாளர் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. (சோளப் பயிர்ச் செய்கைக்காக ஏக்கர் ஒன்றிற்கு ரூபா 5,000 தொகைக்கும், நெற் பயிர்ச் செய்கைக்காக ஏக்கர் ஒன்றிற்கு ரூபா 8,200 தொகைக்கும் வழங்கப்பட்டிருந்தது.) | |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1986 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட கிராந்துருகோட்டை கால்நடை பண்ணைக்குச் சொந்தமான 57 கட்டிடங்கள் 2019 ஆம் ஆண்டின் போது மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வந்திருந்த போதிலும் அதில் 7 கட்டிடங்கள் முழுமையாக உடைந்த நிலையில் காணப்படுகின்றமையால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடைந்த நிலையில் உள்ள ஏழு கட்டிடங்களை எதிர்காலத்தில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கம்பனிக்குச் ரெந்தமான கிராந்துருகோட்டை பண்ணையின் கால்நடை பராமரிப்பு பயிற்சி நிலையமொன்றாக மாற்றும் நோக்கில் மகாவலி அதிகார சபையில் ‘‘சீ’’ வலயத்தினால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 12,501,900 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாட்டு பண்ணை, ஆட்டு பண்ணைகளை உள்ளடக்கிய நிர்மாணங்கள், பொருட்கள் ரூபா 8,967,600 தொகைக்கு பெறுமதியிடப்பட்டு 2016 பெப்ரவரி 08 ஆந் திகதி கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாணங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக குறித்த திட்டமொன்று அல்லது முறைமையொன்று கம்பனியிடம் காணப்படாதிருந்தமையால் கையளிக்கப்பட்ட திகதி முதல் அந்த சொத்துக்கள் பயனற்றுக் காணப்பட்டது. | ‘‘சீ’’ வலயத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட பயிற்சி நிலையம் கம்பனிக்கு கையளிக்கப்பட்ட போதிலும் இதற்காக கால்நடைகளை கொள்வனவு செய்வதற்கு கம்பனிக்கு மூலதன இயலுமை காணப்படவில்லை. இதனால் அரச தனியார் கூட்டுமுயற்சி ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இதற்காக கால்நடைகளை கொள்வனவு செய்து இந்தக் கட்டிடங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | இந்த நிர்மாணங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கான முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |